**பஸ்பாகே கோரள பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

.

பஸ்பாகே கோரள பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பஸ்பாகே கோரள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் அஸ்பொண்ட் வெளிகம்பொல சன சமூக மண்டப திருத்தத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 150,000 தொகை மீண்டெழும் செலவினம் ஒன்று மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகள் மூலம் சீராக்கம் செய்யப்படும் | செலவினம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 85,950 ஆன 4 அலுவலக மேசைகள் மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (இ) | பெறவேண்டிய முத்திரை கட்டணங்கள் ரூபா 1,457,550 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது | - மேற்படி - | பெற வேண்டிய வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | மீளாய்வாண்டில் கைதவிர்க்கப்பட்ட ரூபா 82,450 ஆன சொத்துக்கள் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டு இருக்கவில்லை | - மேற்படி - | ஏலவிற்பனை மற்றும் அழிக்கப்பட்ட பொருட்களுக்காக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 509,262 பெறுமதியான 07 கணக்கு மீதிகள் அட்டவணைகள் மற்றும் கோவைகள் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | இதில் குறிப்பிடப்பட்ட மீதிகள் தொடர்பாக மேலும் ஆராய்ந்து பார்த்து தீர்வு செய்வதாக | நிதிக்கூற்றுக்களில் மீதிகளுக்காக ஆவணங்கள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 ஏப்ரல் 24 ஆந் திகதிய 2018/05 ஆம் இலக்க மத்திய மாகாண, உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | இரண்டு ஊழியர்கள் நாளாந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு 2019 ஆகஸ்ட் மாதம் முதல் 2022 அக்டோபர் மாதம் வரையான காலப்பகுதியில் சம்பளமாக ரூபா 2,392,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சபையில் காணப்படும் தொழிலாளர் வெற்றிடங்கள் காரணமாக தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பதில் அதிக தேவைப்பாடு காணப்பட்டன. அதன் பிரகாரம் எம்மால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்காக உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் அங்கீகாரத்தின் பேரில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,076,675 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,750,304 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,540,000 | 5,364,782 | 4,686,432 | 6,044,710 | 4,895,000 | 5,282,238 | 5,488,058 | 5,366,360 |
| (ii) | வாடகை | 3,313,475 | 1,830,956 | 2,216,407 | 447,584 | 4,351,441 | 1,875,533 | 1,129,214 | 833,035 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 879,850 | 832,410 | 765,110 | 573,000 | 900,900 | 885,186 | 779,786 | 505,700 |
| (iv) | ஏனைய வருமானம் | 30,363,750 | 29,488,871 | 29,915,721 | 25,459,581 | 30,388,000 | 30,179,332 | 22,678,941 | 25,886,431 |
| | கூட்டுத் தொகை | 40,097,075 | 37,517,019 | 37,583,670 | 32,524,875 | 40,535,341 | 38,222,289 | 30,075,999 | 32,591,526 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதவரி அலகொன்றின் நிலுவை ரூபா 5,000 இற்கும் மேற்பட்ட 24 வீதவரி ஆதனங்களிலிருந்து மொத்தம் ரூபா 173,274 ஆக காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு வருமான பரிசோதகர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| **(ஆ)** | **ஏக்கர் வரி**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏக்கர் வரி அலகொன்றின் நிலுவை ரூபா 1,000 இற்கும் மேற்பட்ட 34 ஏக்கர் வரி அறவிடக்கூடிய ஆதனங்களிலிருந்து மொத்தம் ரூபா 127,672 ஆக காணப்பட்டது. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை ஏக்கர் வரி அறவிடப்படல் வேண்டும் |

**(இ) நீர் வரி**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்கு சொந்தமான 17 நீர் செயற்திட்டங்களில் இருந்து 1,093 நீர் பாவனையாளர்களிடமிருந்து ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படும் மீதி ரூபா 3,975,544 ஆக இருந்தது. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை நீர் க்ட்டணங்களை அறவிடப்படல் வேண்டும் |
| (ii) | சபைக்கு உரிய 04 நீர் செயற்திட்டங்களின் புதிய நீர் இணைப்பை வழங்கும் போது 530 நீர் பாவனையாளர் களிடமிருந்து 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக இருந்து வரும் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,603,141 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிலுவை நீர் கட்டணங்களை அறவிடுவதற்கு வெவ்வேறு நடவடிக்கைககள் எடுக்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |
| (ஈ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 15 விளம்பர பதாதைகளுக்கு உரியதாக ஓராண்டுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படும் மீதி ரூபா 247,517 ஆக இருந்தது. | நிலுவை கட்டணங்களை செலுத்துமாறு குறித்த நிறுவனங்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | விளம்பர பதாதை கட்டணங்களை அறவிடல் வேண்டும் |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,335,534 ஆகவும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 19,653,250 ஆகவும் இருந்தது. | முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் என்பவற்றை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிர்மாணக் கடன்பட்டோர் மீதி ரூபா 77,415,330 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 15,456,641 மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,942,680 ஆக இருந்தது | பணத்தை மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய மீதிகளை அறவிடல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட 02 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 83,980,932 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கால வீச்சில் கூட்டுத்தொகை ரூபா 18,259,341 ஆகவும் 05 ஆண்டுகளை மிகைத்திருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,145,607 ஆக இருந்தது. | பணம் மீள் நிரப்பப்படாமையால் கொடுப்பனவு செய்ய முடியாதுள்ளது | செலுத்த வேண்டிய மீதிகளை அறவிடல் வேண்டும் |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2008 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அபிவிருத்தி அனுமதி பத்திரங்களுக்காக 364 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 331 ஆக இருந்தது எவ்வாறாயினும் அக்காலப் பகுதியில் இணக்கச் சான்றிதழ்கள் 58 மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. | 2018 மற்றும் 2019 இல் 51 இணக்க சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப் பட்ட விண்ணப்பங்களுக்காக 03 வருடங்கள் கடந்த பின்னர் அறிவிப்பதற்கு மீண்டும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. | இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) வீதவரி அறவீட்டிற்காக புதிய ஆதன மதிப்பீடு மேற்கொள்ளப் படாமல் 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதன மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரி அறவிடப்பட்டு இருந்தது. | ஆதனங்களில் வருடாந்த பெறுமதி சதவீதமாக திருத்தம் செய்யப்பட்டமை பொருத்தமானது என ஆளுநரின் அங்கீகாரம் இதுவரை கிடைக்கவில்லை. | வீதவரி ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் |

## 3.3 சர்ச்சைக்குரிய தனமையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடமிருந்து குத்தகைக்காக பெற்றுக் கொண்ட 02 ஏக்கருடன் கூடிய 02 கல் குழிகளுடன் கூடிய கருங்கல் காணி ஒன்றினை கேள்வி அளித்து 05 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கும் போது விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீடு ஒன்றை பெற்றுக் கொள்ளாமல் 01 கியூப் கருங்கலுக்கு ரூபா 200 ஆன குறைந்த கேள்வியொன்று தீர்மானிக்கப்பட்டு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | அனைத்து தகைமை களையும் கொண்ட கேள்விதாரர் ஒரு கியுப் கருங்கலுக்காக குறைந்தது குறைந்த கேள்வி ரூபா 100 பெற்றுக் கொள்வது பொருத்தமான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் போது தீர்மானிக்கப்பட்டது. | மதிப்பீடு செய்து விலை தீர்மானிக்கப்பட வேண்டும் |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் ஆவணங்களின் பிரகாரம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் உரித்து காணப்படும் 13 மயானங்களும் பிரதேச செயலாளருக்கு உரித்தாக உள்ள 17 மயானங்களும் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2020 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மெய்மயாய்வு சபையால் 24 மயானங்கள் மாத்திரம் இனங் காணப்பட்டிருந்தன இந்த மயானங்களைள் பிரதேச சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை | மயானங்களை சபைக்கு கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன்றனஇ | மயானங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 128 ஆம் பிரிவின் பிரகாரம் பொது வசதிகளை வழங்குவதற்காக சபையினால் நிர்மாணிக்கப் பட்டிருந்த 34 சன சமூக மண்டபங்கள் அமைந்துள்ள காணிகளின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | சனசமூக மண்டபங்களை கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சன சமூக மண்டபங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **கல முதுன விளையாட்டரங்கு அருகில் இருந்து லயன் அறை வரை 01 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி செய்தல் - ரூபா 498,350** | | |
| (அ) | மதிப்பீட்டின் பட்டியலின் பிரகாரம் வீதியில் பரப்பப்பட்ட கொங்கிரீட் பரப்பின் தடிப்பு 06 அங்குல தடுப்பில் நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும் வீதியின் 20 மீற்றர் மற்றும் 48 மீற்றர் தூரத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட Core வெட்டின் பிரகாரம் அதன் தடிப்பு 5 அங்குலம் மாத்திரம் இடப்பட்டிருந்தமையால் 3.08 கன மீற்றருக்காக ரூபா 62,270 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் போக்குவரத்து செலவினம் ரூபா 3,886 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வீதி நிர்மாணத்திற்காக இடப்பட்டிருந்த கொங்கிரீட் கலவையும் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | இச்செயற்திட்டத்தை பரீட்சித்து குறித்த அறிக்கையை சமர்ப்பிப்பதாகவும் கூடுதலாக கொடுப்பனவு செய்து இருந்தால் அதனை கழித்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | போதுமான கண்காணிப்புடன் நடத்திச் செல்லப்பட வேண்டும் |
| (ஆ) | வீதியின் இரண்டு பங்கங்களிலும் மரங்கள் மற்றும் பெயர் பலகை பொருத்துவதற்கு ரூபா 20,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை | வீதியின் இரண்டு பக்கத்திலும் மரங்கள் நடுவதற்கு இடவசதி இல்லாமையால் சோளம் கந்த புதிய கிராமத்தில் நாற்றுக்கள் நடப்பட்டுள்ளதாக | நிறைவேற்றப்பட்ட செயற்பாடு களுக்காக கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் |

**3.6 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்** | | |
| அங்கீரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 08 பதவிகளில் 11 வெற்றிடங்களும் பதவியொன்றில் 09 மிகைகளும் காணப்பட்டன. | வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதன் தேவைப்பாடு சுட்டிக் காட்டப்பட்டு அவ்வப்போது வேண்டுகோள் இடப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை பூர்த்தி செய்யப்பட வேண்டும் |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| ஓய்வு பெற்ற மரணித்த மற்றும் சேவை விட்டுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 484,746 ஆன ஊழியர் கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிலுவை ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும் |